முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 725**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

23.09.2021, வியாழக்கிழமை

1. பார்காக்க வந்த வள்ளலே
   பரமானந்த சதா சிவ சற்குருவே
   பார்தன்னை ஞானலோகமாக மாற்றி
   பாமரர்க்கும் ஞானமருளி காக்க வந்த ஞானதேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி தன்னை
   ஆசிதந்து உன்னுள் யானிருக்க
   அரங்கன் உன் கரம்பட்ட மக்களெல்லாம்
3. மக்களெல்லாம் கலியுகத்தில் ஞானவான்களாகி
   மகத்துவம்பட அரங்கன் நீ செய்யும் உலகமாற்றத்தில்
   தேக்கமின்றி ஞானிகளாக உருவாகக்கூடும்
   தேசிகன் நீ தொடருகின்ற தர்மத்தை
4. தர்மத்தை எந்த மக்களெல்லாம்
   தடையற கைக்கொண்டு தொடர்ந்து செய்து கொண்டு
   ஆக்கமுடன் அரங்கன் உன் சீடர்களாக
   அடையாளம் கொண்டு உலகில் சேவையாற்றுகின்றனரோ
5. ஆற்றுகின்ற உலக மக்களெல்லாம்
   அழியாமை பெற்று இந்த கலியில் சிறப்பது உறுதி
   உறுதிகொண்டு அரங்கன் உன்வழி யான் உலகோர்க்கு வரம் பல தந்து வர
   கருதி அரங்கன் உன் வழியே கலியுகத்தின் சிறந்த வழி என்று உலகோர் ஏற்று
6. ஏற்று அரங்கா முருகா என
   எக்கணமும் தொடர்ந்து நாமஜெபங்கள் செய்து கொண்டு
   பற்றுவைத்து உன் வழி தொடர்ந்து வர
   பாருலகில் வருகின்ற மக்கள் அனைத்துபேருக்கும்
7. அனைவருக்கும் பிறவாத பெரும்பேறு
   அகிலமதில் ஆறுமுகன் என்னால் அருளப்படும்
   துணையாக யானிருந்து வரும் மக்களுக்கு
   தெய்வநிலை கூட்டி உயர்த்திடுவேன்
8. உயர்த்திட அரங்கன் உன் வழியே
   உலகை மாற்றும் சிறந்த வழி
   தயவான அரங்கன் உன் தர்மமே
   தரணியை காக்கும் மகா கவசமாகும்

9. ஆகவே அரங்கன் தொடர்போடு
அகிலத்தார் ஞானவழி தொடர்ந்து வர
மகிழவே உலகம் மாற்றம் பெறும்
மகான் அரங்கன் வழி ஞானயுகமாற்றம் அடையக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–